59—

பெரியகுளம் ஆதிதிராவிடர் மாணவர் இல்லத்திற்குப் புதிய கட்டிடம்.

*9049—திரு எம். பெரியவீரன் :

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியகுளம் நகரத்தில், ஆதிதிராவிடர் நலத் துறை மாணவர் இல்லம் வாடகைக் கட்டிடத்தில் இயங்குவதால், அதற்கு அரசு புதிய கட்டிடம் கட்டித்தர ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. தேவைக்கும் நிதி நிலைக்கும் ஏற்ப வரும் ஆண்டுகளில் இது பரிசீலிக்கப்படும்.

திரு. எம். பெரியவீரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியகுளம் பகுதியில் எனது தொகுதியில் 30 சதவீதத்திற்கும் மேற்பட்ட ஆதி திராவிட மாணவர்கள் அந்தப் பகுதியில் பயின்று வருவதால் தங்குவதற்கு வசதி இல்லாத காரணத்தால் வாடகைக் கட்டிடங்களில் தங்கி பலதடவை அந்த இடங்களை மாற்றம் செய்யக்கூடிய சூழ்நிலையில் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டு இருப்பதால் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் அரசு சார்பாக அந்த மாணவர்களுக்கு இல்லங்களைக் கட்டுவதற்கு அடுத்த ஆண்டு ஆவன செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டில் அதை செய்து முடிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரக்கூடிய நிதி ஆண்டில் நிதி நிலைமைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 60, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.